# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண். 9/2021

வா.சா.1– குறுக்கு விசாரணை – நாள் 23–10–2025.

பெயர் = பெரியசாமி வா.சா.–1

வா.சா.–1 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1ம்பிரதிவாதி தரப்பில் கு.வி.–

1. தாவா சொத்து என்னுடைய பூர்விக சொத்து கிடையாது என் மனைவிக்கு அவர் தந்தை வழி பாத்தியப்பட்டது என்றால் சரிதான். என் மனைவி பெயர் லெக்கம்மாள் என்றால் சரிதான். லெக்கம்மாளுடன் உடன்பிறந்தது ஒரு சகோதரர் மட்டும். லெக்கம்மாளின் அப்பா தான் என்னுடைய மாமனார் வெள்ளைச்சாமி என்றால் சரிதான். வெள்ளைச்சாமிக்கு தாவா சொத்து பூர்விக சொத்தா கிரைய சொத்தா என்றால் அவர் புழக்கிவந்தார் என சாட்சி கூறுகிறார். வெள்ளைசாமியின் அப்பா சின்னக்காளை என்றால் சரிதான். சின்னக்காளைக்கு மொத்தம் மூன்று பிள்ளைகள். வெள்ளைச்சாமியுடன் பிறந்த சகோதரர் லெக்குச்சாமி அவர் இறந்துவிட்டார். அவருக்கு வாரிசுகள் உள்ளூரில் இருக்கிறார்கள் என சாட்சி கூறுகிறார். வெள்ளைச்சாமிக்கு தாவா சொத்து பாத்தியம் என்ற வகைக்கு பாகப்பிரிவினை ஆவணமும், குடும்ப செட்டில்மெண்ட் ஆவணமும் கிடையாது என்றால் சரிதான்.

2. வெள்ளைச்சாமி அவருடைய மகள் லெக்கம்மாளுக்கு தாவா சொத்தை சீதனமாக கொடுத்ததற்கு ஆவணம் எதுவும் இல்லை என்றால் என் மனைவிக்கு கொடுக்கவில்லை எனக்குதான் அனுபவிக்கசொல்லி என் மாமனார் கொடுத்தார் என சாட்சி கூறுகிறார். பொய்யாக வழக்கு தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிப்பதால்தான் வழக்கு சங்கதிகளுக்கு முரண்பட்டு நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிராதில் தாவா சொத்து வெள்ளைச்சாமிக்கு பூர்வீக பாத்தியப்பட்டதாகவும் எனது மனைவிக்கு சீதனமாக கொடுத்ததாகவும் சொல்லிவிட்டு தற்போது அதற்கு முரண்பட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிராது சொத்து விபரத்தில் குறிப்பிட்டுள்ள நான்குமால்கள் எதன் அடிப்படையில்

குறிப்பிடப்பட்டது அதற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்து வருவாய் ஆவணங்களில் யார் பெயரில் உள்ளது என்றால் நத்தம் புறம்போக்கு என உள்ளது என்று சாட்சி கூறுகிறார். தாவா சொத்திற்கு என் மாமனார் பெயருக்கோ, அவருடைய தந்தை பெயருக்கோ, என் மனைவி பெயருக்கோ பட்டா கிடையாது என்றால் சரிதான்.

3. 1ம்பிரதிவாதி என் மாமனாருக்கு அண்ணன் தம்பி உறவுமுறை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் தகப்பனாரும், என் மாமனாரின் தகப்பனாரும் உடன்பிறந்தவர்கள் என்றால் சரிதான். மேற்படி உறவுமுறையை பிராதில் குறிப்பிடாமல் மறைத்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு எந்த வகையிலும் தொடர்பு இல்லாதவர் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் மேற்படி உறவுமுறையை பிராதில் சொல்லியிருந்தால் வழக்கு சொத்து பாகம் பிரிக்கப்படவில்லை என்ற விபரம் நீதிமன்றத்திற்கு தெரிந்துவிடும் என்று மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் தந்தை பெயர் லெக்கமூப்பர் என்றால் சரியல்ல அழகுமூப்பர் என சாட்சி கூறுகிறார். குழப்பம் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக 1ம் பிரதிவாதியின் தந்தை பெயரை மாற்றி குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வெள்ளைச்சாமிக்கு பூர்வீக பாத்தியம் என குறிப்பிட்டுவிட்டு அவருடன் பிறந்த பங்குதாரர்களை தரப்பினர்களாக இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல.

4. வழக்கு சொத்திற்கு கிழக்கே 1ம் பிரதிவாதிக்கு இடம் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு மேற்கே சோலைமூப்பர் இடம் உள்ளது என்றால் சரிதான். 1ம்பிரதிவாதியின் அப்பா, சோலைமூப்பர், என் மாமனாரின் அப்பா மூவரும் உடன்பிறந்தவர்கள் என்றால் சரிதான். 1ம்பிரதிவாதியின் சொத்தை நான் ஆக்கிரமிப்பு செய்துகொண்டு அவர் நடவடிக்கை எடுத்துவிடுவார் என்று பயந்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து சின்னக்காளையின் பாகத்திற்குரிய சொத்து வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்றால் அவருடைய வாரிசுதாரர்களுக்குதான் உரிமை உள்ளது எனக்கு தாவா வழக்கை தாக்கல் செய்ய உரிமையில்லை என்றால் சரியல்ல. என் மனைவி உயிருடன்தான் இருக்கிறார் என்றால் சரிதான். தாவா சொத்தின் கூட்டு பங்குதாரரான என் மனைவியை வைத்து வழக்கு தாக்கல் செய்யாமல் தாவா சொத்து எனக்கு பாத்தியம் என விளம்புகை பரிகாரம் கேட்டு நான் வழக்கு தாக்கல் செய்திருப்பது சட்டப்படி செல்லத்தக்கதல்ல, வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில்

காலிமனை ஒன்றும், மற்றும் வீடும் உள்ளதாக குறிப்பிட்டு தனித்தனி அளவில் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் வா.சா.ஆ–1 முதல் 3 ஆவணங்கள் தாவா சொத்தில் உள்ள வீட்டு ரசீது என்றால் சரிதான். மேற்படி ஆவணங்கள் காலிமனைக்கு பொறுந்தாது என்றால் சரியல்ல. காலிமனைக்கு நான் வரி கட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து பாகம் பிரிக்கப்படாத கூட்டு குடும்ப சொத்து என்றாலும், அதன் பங்குதாரர்களில் ஒருவரை திருமணம் செய்த வகையில் வழக்கு சொத்தின் அனுபவத்தை எந்த வகையிலும் எனக்கு சாதகமாக எடுத்துக்கொள்ளமுடியாது என்றால் சரியல்ல. வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**2, 3 பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை**

தாவா சொத்தின் சர்வே எண் தெரியும். அளவு தெரியுமா என்றால் கிழமேல் 19 அடி தென்வடல் 37 அடி. மேற்படி அளவு உள்ள இடத்திற்குதான் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 2017 ல் தூய்மை இந்தியா திட்டத்தில் கிராம பஞ்சாயத்திலிருந்து கழிவறை கட்டிகொடுத்தார்கள். மேற்படி கழிவறையும் நான் வழக்கு தாக்கல் செய்துள்ள இடத்திற்குள் கட்டுப்பட்டது என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியிடம் தாவா சொத்திற்கு பட்டா கேட்டு மனு கொடுத்தேன். என்ன காரணத்திற்காக பட்டா கொடுக்கவில்லை என்றால் 1ம் பிரதிவாதி அவருடைய இடம் என்று சொன்னதால் பட்டா கொடுக்கவில்லை என சாட்சி கூறுகிறார். என் மாமனார் வெள்ளைச்சாமி உயிருடன் இருக்கிறாரா என்றால் இருக்கிறார். தாவா வழக்கை நான் தாக்கல் செய்வதற்கு சட்ட அருகதை இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டதல்ல என்றால் சரியல்ல.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S